# நொச்சியாகம பிரதேச சபை

## அநுராதபுர மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 27 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 ஏப்ரல் 01 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நொச்சியாகம பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் அதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டிருந்த தாக்கம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | குறைபாடுகளின் தன்மை | விடயங்களின் எண்ணிக்கை | நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | வருமானம் | செலவினம் | பொறுப்புக்கள் | சொத்துக்கள் |
| | | | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 | ரூபா.000 |
| (அ) | நிதிக்கூற்றுகளில் விடுபாடுகள் | 18 | - | - | - | 1,055 |
| | -மேற்படி- | 01 | - | 1,247 | - | - |
| | -மேற்படி- | 01 | - | - | 30,228 | - |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுகளில் அதிகரித்துக் காட்டுதல்கள் | 03 | 103 | - | - | - |
| (இ) | நிதிக்கூற்றுகளில் குறைத்துக் காட்டுதல்கள் | 01 | 04 | - | - | - |
| | -மேற்படி- | 01 | - | - | 32 | - |
| (ஈ) | நிதிக்கூற்றுகளில் முறையற்ற வெளிப்படுத்தல்கள் | 12 | - | - | - | 432 |

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் ரூபா 1,180,700 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அம்மீதிகள் ரூபா 1,182,000 ஆக இருந்தது.

### 1.3.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

சபைக்குச் சொந்தமான இலங்கை வங்கிக் கணக்கிற்குரிய பொழிப்புக் காசேட்டின் 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 3,589,594 ஆன மீதி காணப்பட்டதுடன் அத்திகதியிலுள்ளவாறு ஐந்தொகையின் பிரகாரம் ரூபா 3,592,984 ஆன மீதியொன்று வெளிப்படுத்தப்பட்டது. இதன் பிரகாரம் ரூபா 3,390 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தும் அவ்வேறுபாட்டிற்கான காரணம் விளக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 949,754 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 11,270,711 ஆன கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த/உறுதிசெய்ய முடியாதிருந்தது.

### 1.3.6 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாண அறிவுறுத்தல்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மனங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 2002 இன் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி அதிகாரச்சட்டம் | பெறுமதிசேர் வரி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வரி அறவிடக்கூடிய வருமானம் 03 மாதங்களில் ரூபா 500,000 அல்லது வருடத்தின் போது ரூபா 1,800,000 இனை விஞ்சுகின்ற வருமானங்களுக்குரிய வருமான மூலங்களினால் பெறப்படுமாயின் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு பெறுமதிசேர் வரிக்காக பதிவுசெய்து இலக்கம் ஒன்றைப் பெற்று உரிய மூலங்களிலிருந்து பெறுமதி சேர்வரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டினுள் அவ்வாறு வரி அறவிடக்கூடிய வருமானம் ரூபா 7,857,976 ஆக இருந்தும் மேற்கூறப்பட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2006 இன் 12 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிகள் | வியாபார அனுமதிப்பத்திரம் மற்றும் வியாபார உரிமையினை வாடகைக்கு விடும் வருமான முலங்களிலிருந்து ரூபா 1,000 அல்லது |

| | | |
|---|---|---|
| | அதிகாரச்சட்டம் | உரிய வருமானத்தில் 10% என்ற இரண்டில் கூடிய பெறுமதிக்குரிய தொகையொன்று முத்திரைக் கட்டணமாக அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டிய போதிலும் வியாபார அனுமதிப்பத்திர வருமானம் மற்றும் வியாபார உரிமையை வாடகைக்கு விடும் வருமானங்களிலிருந்து முத்திரைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. |
| (இ) | 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச் சட்டம் | 03 சந்தர்ப்பங்களில் கொடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 229,575 ஆன நிலையான கட்டணங்களின் 5% நிறுத்திவைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாடடு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,713,037 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,473,408 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப் பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப்பட்ட | உள்ளவாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (அ) | வீதவரியும் வரியும் | 1,763 | 1,450 | 313 | 1,769 | 485 | 2,809 |
| (ஆ) | வாடகை | 3,107 | 2,731 | 376 | 2,366 | 1,995 | 3,904 |
| (இ) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 859 | 859 | - | 953 | 953 | 168 |
| (ஈ) | ஏனைய வருமானம் | 10,172 | 2,851 | 7,321 | 9,574 | 4,112 | 6,173 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றம் ஒன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதம செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 557,221 தண்டப்பணம் சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 காணி வரி

சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மூலதன நிலப் பெறுமதியில் 2% ஆன வருடாந்த வரி 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 153(1) ஆம் பிரிவின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 கடை வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படுகின்ற நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 3,764,350 ஆக இருந்ததுடன் அத்திகதியிலுள்ளவாறான நிலுவை கடை வாடகை தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது 03 இலிருந்து 11 வருடங்கள் வரையான காலப்பகுதியிலிருந்து ரூபா 3,263,250 ஆன நிலுவை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 2.2.5 வீட்டு வாடகை

பிரதேச சபைக்கு சொந்தமான 06 வீடுகளிலிருந்து 1997 முதல் 2010 திசெம்பர் 31 வரையான காலப்பகுதிக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வாடகை ரூபா 140,650 ஆக இருந்ததுடன் அதனை அறவிடுவதற்காக போதியளவு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| **செலவின விடயம்** | **பாதீடு செய்யப்பட்டது** | **உள்ளவாறான** | **முரண்** | **பாதீடு செய்யப்பட்டது** | **உள்ளவாறான** | **முரண்** |
| **மீண்டுவரும் செலவினம்** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** | **ரூபா '000** |
| ஆளணி வேதனம் | 10,869 | 10,598 | 271 | 11,420 | 10,483 | 937 |
| ஏனையவை | 14,307 | 15,590 | (1,283) | 9,330 | 7,113 | 2,217 |
| உப மொத்தம் | 25,176 | 26,188 | (1,012) | 20,750 | 17,596 | 3,154 |
| மூலதனச் செலவினம் | 16,400 | 2,547 | 13,853 | 54,707 | 3,500 | 51,207 |
| மொத்தம் | 41,576 | 28,735 | 12,841 | 75,457 | 21,096 | 54,361 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

### 2.4.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

(அ) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| **பதவியினர் தரம்** | **அங்கீகரிக்கப்பட்ட** | **உள்ளவாறான** |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | 01 |
| இரண்டாம் தரங்கள் | 08 | 10 |
| ஆரம்ப தரங்கள் | 16 | 20 |
| | 25 | 31 |

(ஆ) முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் பிரதேச சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவினரை விஞ்சி 06 ஊழியர்கசை் சேர்த்து சம்பளமாக மீளாய்வாண்டில் ரூபா 701,800 செலுத்தப்பட்டிருந்தது.

### 2.5 சொத்துக்களின் முகாமைத்துவம்

#### 2.5.1 செயற்பாடற்ற பௌதீக வளங்கள்

ரூபா 164,200 பெறுமதியான வாகனம் ஒன்றும் 03 இயந்திரமும் பெறுமதி வெளிப்படுத்தப்படாத கைடெக்ரர் ஒன்றும் 1994 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டது.

#### 2.5.2 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பாதிசேதனை / மெய்மையாய்வு அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 100,478,621 ஆக இருந்தது.

### 2.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2003 செப்தெம்பர் 15 ஆந் திகதிய என்சீபீ/பீஎஸ்/பீரீ/04 ஆம் இலக்க மாகாண சபைச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் மகநெகும, கமநெகும செயற்திட்டங்களுக்காக செய்யப்பட்ட நிருவாகச் செலவினங்கள் நிதி ஏற்பாடுகளிலிருந்து செலுத்த வேண்டிய பிரயாணச் செலவுகள், மேலதிக விடுமுறைதினக் கொடுப்பனவுகளுக்காக மாத்திரமாக இருந்த போதிலும் அதனைக் கருத்திற்கொள்ளாது 2009 இற்காகக் கிடைத்திருந்த நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 37,837 ஆனது பதவியினருக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.7 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான மூலதன மானியமாக ரூபா 12,882,666 கிடைத்திருந்த போதிலும் வருடத்தினுள் அதில் ரூபா 2,547,291 தொகை மாத்திரமே செலவு செய்யப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மூலதன செயற்பாடுகளுக்கான நிதி ஏற்பாட்டில் 20% மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய 80% உம் வங்கிக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2007 இலிருந்து 2009 ஆண்டு காலப்பகுதியினுள் செய்யப்பட்ட 07 வேலைகளுக்காக கையில் பிடித்து வைக்கப்பட்டிருந்த ரூபா 23,447 ஆன பணம் 2010 திசெம்பர் 31 வரையிலும் தீர்க்கப்படாதிருந்ததுடன் வேலைகளின் குறைபாடுகள் காணப்படுமாயின் ஒப்பந்தகாரரை அழைத்து பூர்த்தி செய்து அவற்றினை விடுவிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.8 செயலாற்றல்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் பிரகாரம் பிரதேச சபை அதிகாரப் பிரதேச பொதுமக்களின் வசதிகள், பொதுநலன் செயற்பாடுகள், சுகாதாரம், வீதிகள் மற்றும் பொதுப் பயன்பாட்டுச் சேவைகளுக்குரிய செயற்பாடுகளை அமுல்படுத்துவதற்கான எதிர்வருடம் வருடங்களின் செயற்பாடுகளுக்குரிய திட்டங்களை உள்ளடக்கிய கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.9 ஒப்பந்த நிருவாகம்

### செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள தாமதங்கள்

மாகாண சபை மானியத்தின் மூலம் ஆய்வுகூடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக 1999 ஆம் ஆண்டிலிருந்து 2002 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் ரூபா 1,053,437 செலவிடப்பட்டு உரிய கட்டிடத்தின் அரைவாசி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் எஞ்சிய வேலைகளைப் பூர்த்திசெய்வதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 2.10 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) ஒப்பந்த நிர்வாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்